**அளவ்வ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜுன் 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அளவ்வ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 37,280 பெறுமதியான கணினி உதிரிப்பாகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணினி உதிரிப்பாகங்களின் கீழ் ரூபா 36,530 தொகை பெறுமதியான கணினி மின்கலங்கள் 09 மற்றும் ரூபா 750 தொகை பெறுமதியான டெல் வகையைச் சேர்ந்த விசைப்பலகை ஆகியவை கணக்கீடு செய்யப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | உபகரணங்களின் இருப்பு மீதி ரூபா 197,674 தொகை அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இருப்புக்களை ஏடுகளிலிருந்து பிரதியெடுக்கும் போது நேர்ந்துள்ள தவறுகள் காரணமாக பிழையான பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. சரியான பெறுமதியை வழங்க உரிய விடயங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன். |
| (இ) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள 03 கணக்குகளிற்குரிய மீதிகள் | உரிய மீதிகளில் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி | இடர் கடனுக்காக 2019.12.19 ஆம் திகதி வழங்கப்பட்ட ரூபா 228,660 பெறுமதியான தொகையை ஆவணத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அவற்றுக்கு உரிய உப ஆவணங்களில் காணப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 230,995 பெறுமதியான தொகை இணங்காமல் காணப்பட்டது. | செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்து வைக்கத் தவறியதன் காரணமாக 2019.12.31 ஆம் திகதிக்கு உரிய உப ஆவணத்தில் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, வித்தியாசங்களை கண்டுபிடித்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். |
| (ஈ) | ரூபா 7,307,026 தொகை பெறுமதியான 02 கணக்குகளுக்கான உரித்துக்கள் மற்றும் உரிய உப ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். | காணிகளுக்கு இதற்கு முன்பு தற்காலிக மதிப்பீடொன்றை வழங்கி நிலையான சொத்துக்கள் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போது அலவ்வ பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி கையளிப்பு உத்தரவுகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில் இருந்து உள்ளூராட்சி ஓய்வூதியம் பெறுவோரின் ஆவணமொன்று தொடங்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **விதிகள் மற்றும் சட்ட ஏற்பாடுகள்** | | | |
| 2018 நவம்பர் 23 ஆம் திகதிய 2099 இலக்க இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் | சுற்றுலாத் துறையால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள அலவ்வ பேர்ட் பார்க் ஹோட்டலில் இருந்தும் நிபுண உணவு விடுதியில் இருந்தும் 1 சதவீத வரையான கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | சுற்றுலாத் துறையால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள உரிய ஹோட்டலில் இருந்து 1% கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,520,211 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,309,488 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2019 ஆம் ஆண்டு | | | | 2018 ஆம் ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா .000. | ரூபா .000. | ரூபா .000. | ரூபா .000. | ரூபா .000. | ரூபா .000. | ரூபா .000. | ரூபா .000. |
| I. | வீதவரியும் வரியும் | 4,649 | 4,320 | 4,276 | 410 | 3,502 | 2,894 | 3,447 | 366 |
| II. | வாடகை | 10,564 | 9,772 | 9,765 | 90 | 11,530 | 9,899 | 10,003 | 83 |
| III. | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 842 | 631 | 631 | - | 1,928 | 2,061 | 2,093 | - |
| IV. | ஏனைய வருமானம் | 34,414 | 74,177 | 74,921 | 40,553 | 90,871 | 74,343 | 63,409 | 41,297 |
| | மொத்தம் | 50,469 | 88,900 | 89,593 | 41,053 | 107,831 | 89,197 | 78,952 | 41,746 |

#### 2.2.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட ரூபா 365,793 பெறுமதியான நிலுவைத் தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 142,565 பெறுமதியான தொகை அறவிடப்பட்டுள்ள போதிலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 223,228 பெறுமதியான தொகையில் ரூபா 126,857 பெறுமதியான தொகை 2020 மே 30 திகதி அறவிடப்பட வேண்டியிருந்தது. | முன்னைய ஆண்டுக்காக மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி வரி மற்றும் ஏக்கர் வரி நிலுவையில் 2020.05.30 ஆம் திகதி ரூபா 96370.52 பெறுமதியான தொகை அறவிடப்பட்டுள்ளதோடு எஞ்சிய நிலுவையையும் அறவிடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அலவ்வ பேரூந்து நிலையத்தின் கடைகள் 7 குத்தகைக்கு வழங்கப்படாமல் வெறுமனே காணப்பட்டன. | கடைகளை குத்தகைக்கு விட்டு சபைக்கு வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடைகள் 7 இற்கும் விலைமனுக் கோர வருங்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | ஒரு கடை குத்தகையாளரால் வேறொரு தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, கையளிப்புக் கட்டணத்தை அறவிட்டு புதிய ஒப்பந்தம் இடப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் (வட மேல்) சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எவ்வாறாயினும் தற்போது அந்த நபர் கடையின் குத்தகையாளர் என்பதால் அவருக்கு அறியத் தந்து பணம் செலுத்தப்படவில்லை எனில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 வேறு வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தின் உப அலுவலகத்தின் எல்லைக்குள் உள்ள விளம்பரப் பதாதைகள் தொடர்பாக ஆய்வொன்றை நடத்தி உரிய கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆய்வொன்றை நடத்தி உரிய கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள விளம்பரப் பதாதைகள் தொடர்பான அனைத்து கட்டணங்களையும் அறவிடுவது பிரதான அலுவலகத்தின் ஊடாக நடைபெறுவதால் வருங்காலத்தில் உப அலுவலகத்திலும் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா மற்றும் முத்திரைக் கட்டண மீதி முறையேரூபா 3,444,625 மற்றும் ரூபா 37,108,059 ஆக இருந்தது. | மேலும் அறவிடப்பட வெண்டிய நீதிமன்றத்தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நீதிமன்றத்தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களாக இதுவரை ரூபா 22,433,360 கிடைத்துள்ளதாக அறிய தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தை அடுத்து அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட வனத்துக்குள் மலக் கழிவுகள் கொட்டப்பட்டிருந்ததோடு, இதன் மூலமாக சுற்றாடல் சீர்கேடுகள் போலவே ஆரோக்கியத்துக்கும் பெரிதும் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. | சுற்றாடல் சிக்கல்கள் குறைவாக உள்ள விதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பேரூந்து நிலையத்தின் பொதுக் கழிப்பறையில் கழி பவுசரால் எடுக்கப்படும் மலக் கழிவுகள் தற்போது திண்மக் கழிவுப்பொருள் செயற்திட்டக் காணியிலேயே ஒரு பகுதியில் தற்காலிகமாக குழி தோண்டி கொட்டப்படுவதோடு, இவ்வாறு தற்காலிகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் கூட நிரந்தர நிர்மாணம் வழிமுறைக்கு திண்மக் கழிவுப்பொருள் செயற்திட்டக் காணியிலேயே நிர்மாணிக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய ரூபா 45,977,203 பெறுமதியான தொகையில் ரூபா 36,176,490 தொகை 2019 மே 30 ஆம் திகதி மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | மேலும் கிடைக்க வேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீதவரிகள் ரூபா 313,636.45 பெறுமதியான தொகையும், ஏக்கர் வரி ரூபா 27,252.00 பெறுமதியான தொகையும் 2020.05.30 ஆம் திகதி வரை கிடைத்துள்ளதோடு, கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,161,875 பெறுமதியான தொகையும், கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 6,542,467 பெறுமதியான தொகையும் 2020 மார்ச் 12 ஆம் திகதி கிடைத்திருந்தன. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 33,058,007 தொகை பெறுமதியான செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் ஒரு | மேலும் கிடைக்க வேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு ஆண்டுக்கும் மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் மீதிகளில் ஓய்வூதியம் கடன்கொடுத்தோர் மீதி மாதாந்தம் உரிய மாதத்தின் பட்டியலிடப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுக்கும் அதிகமான காலமாக தீர்க்கப்படாமல் காணப்படும் மீதி ரூபா 11,042,506 பெறுமதியான தொகையாக இருந்தது. | | பெறுமதியுடன் ரூபா 20,000 என செலுத்தப்பட்டிருந்தது. |
| )இ( | ரூபா 7,272,981 பெறுமதி யான செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளில் உரிய கால பகுப்பாய்வு காணப்படவில்லை. | இனங்கண்டு தீர்க்க அல்லது முறையான அனுமதயின் பிரகாரம் ஏடுகளில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 7,272,981 பெறுமதியான செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதியில் ரூபா 6,991,276 பெறுமதியான தொகை ஓய்வூதிய கடன் கொடுத்தோர் ஆவதோடு இது தொடர்பாக தெளிவான கால வரிசை பகுப்பாய்வை வழங்க முடியாததன் காரணம் இந்த மீதியில் அதிகளவு 2011.04.01 அன்று புதிய சபையாக உருவெடுத்த தினத்துக்கும் முன்பிருந்தே தொடர்ந்து வரும் மீதி என்பதாகும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**) அ( ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் அதிகப்படியான ஊழியர்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப தரத்தில் 05 பதவிகளில் 11 வெற்றிடங்களும் 03 பதவிகளில் 05 மேலதிக ஊழியர்களும் காணப்பட்டதோடு அமைய அடிப்படையில் ஊழியர்கள் 12 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். | வெற்றிடங்களிற்காக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் மேலதிக பதவியணியினரை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைய அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்கள் 12 பேரும் பணித் தேவைக்காக உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுமதியோடு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதோடு, இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால் மீண்டும் இணைத்துக் கொள்வதைத் தொடங்கிய பிறகு ஏனைய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ(  ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மரணம் இடமாற்றம், மற்றும் தகவல்களை அறிந்துகொள்ள முடியாமை என மாதாந்தம் அறவிடப்படாத ஊழியர கடனாக ரூபா 63,653 ஆக இருந்தது. | ஆவணங்களை நாளதுவரையாக்கி நிலுவை கடன்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தீர்வுசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துக் கொள்கின்றேன். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போயவலான 06 தற்காலிக கடைகளின் ஒப்பந்தக் காலம் நிறைவடைந்திருந்தது. | ஒப்பந்தம் செய்து வாடகைகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருங்காலத்தில் உரிய குத்தகைதாரருக்கு அறியத் தந்து புதிய குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) | போயவலான பொதுச் சந்தையின் கடைகள் 02 மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, ஒரு கடையின் குத்தகையாளர், புதிய குத்தகையாளருடன் ஒப்பந்தம் செய்திருந்தார். | கடைகளை குத்தகைக்கு விடுதல் தொடர்பாக உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளரின் சுற்றறிக்கை விதிமுறைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்தத்தை முறித்த கடைகள் இருப்பின் அவை தொடர்பாக தேடிப் பார்த்து நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்பட்ட 13 சொத்து உருப்படிகள் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உரித்தில்லாமையால் அளவ்வ பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி கையேற்பதற்கான அந்நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 217,178 பெறுமதியான கர உழவு இயந்திரங்கள் 2 மற்றும் ரூபா 72,000 பெறுமதியான ட்ரேலர் 02 செயலற்ற நிலையில் காணப்பட்டன. | பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள செயலற்ற சொத்துக்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துகளை அகற்றும் நடவடிக்கையை இந்த வருடத்துக்குள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |